06 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

ZOOM ONLINE CLASS

# தமிழ் மொழியும் இலக்கியமும்

# தரம் 09

## இரண்டாந் தவணை

## அலகு 09 – வியக்கும் மனம் வேண்டும்




தமிழ் ஆசான்
"அகரம் தினேஸ்"
SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE

REGISTER NOW 0778054232


AGARAM DHINES ONLINE ACADEMY

## வியக்கும் மனம் வேண்டும்

பகுதி – 01

1) பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. கண்ணன் நன்கு படிப்பான் - இவ்வாக்கியம்,

1. கலப்பு வாக்கியம் 2. தனிவாக்கியம் 3. கூட்டு வாக்கியம் 4. கதம்ப வாக்கியம்

2. 'உனக்குப் பணம் வேண்டுமா? " என்று விமலன் கேட்டான். - இவ் வாக்கியம்,

1. தனி வாக்கியம் 2. கூட்டு வாக்கியம் 3. கலப்பு வாக்கியம் 4. கதம்ப வாக்கியம்

3. பின்வருவனவற்றில் வந்த வியப்பு வாக்கியம்.

1. சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடன்

2. மழை பெய்து நாடு செழித்தது.

3. ஆகா! அவருடைய ஜோதியானது தீமைகளை நீக்கும், இருளைப் போக்கும்.

4. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்

4. குமாரும் குமரனும் பாடசாலை வந்து பாடங்களைப் படித்த பின்னர் வீட்டுக்குச் சென்றனர். - இவ்வாக்கியம்

1. தனி வாக்கியம் 2. கூட்டு வாக்கியம் 3. கலப்பு வாக்கியம் 4. விருப்பு வாக்கியம்

5. மழை நன்றாகப் பெய்ததால் குளம் நிரம்பி வழிந்து வெள்ளம் பெருகி ஓடியது - இவ்வாக்கியம்

1. கூட்டு வாக்கியம் 2. கலப்பு வாக்கியம் 3. தனிவாக்கியம் 4. விருப்பு வாக்கியம்

**2) சரியான விடையைத் தெரிக**

6. ஒரு பிரதான கருத்தை மாத்திரம் கூறுவதாக அமைவது,

1. கூட்டு வாக்கியம் 2. கலப்பு வாக்கியம் 3. தனி வாக்கியம் 4. தொடர்வாக்கியம்

7. வதனி பாட்டெழுதிப் பரிசில் பெற்றாள். - இவ்வாக்கியம்,

1. தனி வாக்கியம் 2. தொடர் வாக்கியம் 3. வினா வாக்கியம் 4.விருப்பு வாக்கியம்

8. 'பொலித்தீன் பாவனையால் சூழல் பாதிப்பு அதிகரிப்பதாக ஆசிரியர் கூறினார்." இவ்வாக்கியத்தில் வந்துள்ள தலைமைத் தொடர்,

1. பொலித்தீன் பாவனை 2. சூழல் பாதிப்பு

3. ஆசிரியர் கூறினார் 4. வியங்கோள் வாக்கியம்

9. எனது பேனாவை எடுத்து வா. - இவ்வாக்கியம்,

AGARAM DHINES

1. கூற்று வாக்கியம் 2. வினா வாக்கியம் 3. ஏவல் வாக்கியம 4. வியங்கோள் வாக்கியம்

10. பின்வருவனவற்றுள் வந்த வியங்கோள் வாக்கியம்,

1. செய்வன திருந்தச் செய். 2. அதனை இங்கு கொண்டு வருக!

3. அகத்தின் அழகு முகத்தில தெரியும். 3. நீ என்ன செய்கிறாய்?

03. பின்வரும் வாக்கியங்கள் தனி வாக்கியம் எனின் 'தனி' எனவும் தொடர் வாக்கியம் எனில் 'தொடர்' எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.

11. நளினும், நிலாவும், சனத்தும் நூல் நிலையம் சென்றனர். (..............)

12. அசோகவனத்தில் சீதையைக் கண்ட அனுமன் ஆனந்த மேலீட்டினால் ஆடி உவகைக் கடலில் நீந்தினான்.. (..............)

13. தமிழ் இலக்கிய விழாவில் நானும் கலந்து கொண்டேன். (..............)

14. உஷா வீட்டு வேலைகளைச் செய்து முடித்தாள். (..............)

15. அமைச்சரின் வருகையின் போது அடை மழையில் பெருமளவு மக்கள் திரண்டு வந்து குதூகலமாக வரவேற்றனர். (..............)

04. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16. மாடுகள் கட்டும் இடம் தொழுவம் என்பது போல யானைகள் கட்டும் இடம்,

1. பட்டி 2. பந்தி 3. குடிசை 4. கூண்டு

17. பனையின் இளையது வடலி என்பது போல – நெல்லின் இளையது,

1. விதை 2. தாறு 3. நாற்று 4. கன்று

18. ஆடு மேய்ப்பவன் இடையன் என்பது போல – தேர் செலுத்துபவன்,

1. பாகன் 2. மீகாமன் 3. வலவன் 4. ஆயன்

19. வாழையின் இளம்பிஞ்சு கச்சல் என்பது போல – மாவின் இளம் பிஞ்சு

1. மூசு 2) வடு 3. குரும்பை 4. சுளை

20. மயில் அகவும் என்பது போல – ஆந்தை,

1. கத்தும் 2. கனைக்கும் 3. கூவும் 4. அலறும்

21. ஆடுகளின் கூட்டம் மந்தை என்பது போல அறிஞர் கூட்டம்.

1. அவை 2. பட்டி 3. தொகுதி 4. ஆநிரை

22. நெல்லின் இலை தாள், என்பது போல ஈச்சையின் இலை

1. தாள் 2. இலை 3. ஓலை 4. தளிர்

23. மா, புளி என்பவற்றின் காய்த் தொகுதி,

AGARAM DHINES

1. தாறு 2. குலை 3. கொத்து 4. தாள்

24. மா, வாழை முதலிய பழங்களில் உள்ளீடு,

1. சுளை 2. பருப்பு 3. மணி 4. சதை

25. யானை. குதிரை, ஒட்டகம் முதலியவற்றின் மலம்,

1. விட்டை 2. இலத்தி 3. பிழுக்கை 4. எச்சம்

26. அவரை, துவரை, பயறு முதலிய விதையின் உள்ளீடு,

1. மணி 2. முத்து 3. சுளை 4. பருப்பு

27. நாய் குரைக்கும் என்பது போல புலி,

1. கத்தும் 2. உறுமும் 4. அலறும் 4. கர்ச்சிக்கும்

28. பனைக்கு ஓலை போலச் சோளத்திற்கு,

1. தாள் 2. ஓலை 4. கூந்தல் 4. பருப்பு

29. பூனையின் பெண் பெட்டை எனப்படுவது போல குரங்கின் பெண்

1. கடுவன் 2. மந்தி 3. பிணா 4. வடவை

30. பனைகள் அதிகமுள்ள இடம் பனந்தோப்பு என்பது போலத் தென்னை பெருமளவில் உள்ள இடம்,

1. தென்னந்தோப்பு 2. மாந்தோப்பு 3. தென்னந்தோட்டம் 4. பண்ணை

05) மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

31. தம்மால் அந்த காரியத்தைச் செய்ய முடியும் என அவர் கூறினார். இத,

1. கலப்பு வாக்கியம் 2. தனிவாக்கியம் 3. கூட்டு வாக்கியம் 4. கதம்ப வாக்கியம்

32. மண்ணில் நல்ல வண்ணம் வாழுவோம். - இவ்வாக்கியம்,

1. கூற்று வாக்கியம் 2. வினாவாக்கியம் 3. எதிர்மறைவாக்கியம் 4. ஏவல் வாக்கியம்

33. அவன் நேற்று வந்திலன். - இவ்வாக்கியம்,

1. உடன்பாட்டு வாக்கியம் 2. வினாவாக்கியம்

3. எதிர்மறை வாக்கியம் 4. ஏவல் வாக்கியம்

34. அவனால் கடிதம் எழுதப்பட்டது. - இவ்வாக்கியம்

1. செய்வினை வாக்கியம் 2. எதிர்மறை வாக்கியம்

3. வினா வாக்கியம் 4. செயப்பாட்டுவினை வாக்கியம்

35. கருத்தாவின் செயல் நிகழ்ந்தமையைக் காட்டுவது,

1. எதிர்மறை வாக்கியம் 2. உடன்பாட்டு வாக்கியம்

AGARAM DHINES

3. வியங்கோள் வாக்கியம் 4. ஏவல் வாக்கியம்

06. பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

36. நீ தான் அடுத்துக் கெடுப்பதில் மன்னனாயிற்றே. தான் என்னும் இடைச்சொல்,

1. தெரிநிலை 2. எண் 3. தேற்றம் 4. பிரிநிலை

37. இடைச் சொல் அல்லாதது,

1. விகுதி 2. வேற்றுமை உருபு 3. சாரியை 4. சந்தி

38. தாமே தனித்து நின்று பொருள் தரும் ஆற்றலின்றிப் பெயர்ச் சொற்களையும் வினைச்சொற்களையும் சார்ந்து நின:று பொருள் புலப்படுத்தும் சொற்கள்,

1. உரிச் சொற்கள் 2. பெயர்ச்சொற்கள் 3. இடைச்சொற்கள் 4. குறிப்பு வினைகள்

39. ஓடினான் என்பதில் வந்த ‘இ’ இடைச்சொல்,

1. வேற்றுமை உருபு 2. இடைநிலை 3. விகுதி 4. சாரியை

40. வீதி தோறும் இரண்டொரு பள்ளி வேண்டும் என்றார் பாரதி - இதில் தோறும் என்ற இடைச்சொல் உணர்த்தும் பொருள்.

1. ஒவ்வொருள வீதியிலும் 2. ஒவ்வொரு இடத்திலும்

3. எல்லா வீதியிலும் 4. எங்கும்

பகுதி 2

01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. பெருநகரத்தின் வீதிகள் வெளிச்சமயமாவதற்கு காரணம் யாது?

.....................................................................................................................................................

2. மின் சக்தி செயல் அற்றுப்போகும் போது விளைவு என்னவாகும்?

.....................................................................................................................................................

3. ‘இரவை இரவாகவே காட்சிப்படுத்தும் ஒளி?’ எத்தகைய சிறப்புடையது?

.....................................................................................................................................................

4. “ஒளிப்பெருக்கு ஓர் அழகு என்றால், இருளின் நிறைவு தனிவசீகரம்” - இக் கூற்றினை விளக்குக.

.....................................................................................................................................................

5. நாகரிகப் பொரும் வெளிச்சங்களுக்குப் பழகிப் போன மனிதர்கள் எவற்றைக் காணத்தவறிவிடுகிறார்கள்.

.....................................................................................................................................................





AGARAM DHINES

6. இப்பாடம் இயற்கை வனப்புகளை அள்ளிப் பருகும் பக்குவத்தின் அவசியத்தை எவ்வகையில் வலியுறுத்துகின்றது?

.................................................................................................................................................................

7. வல்லிக் கண்ணன் எழுதிய இரு நூல்களின் பெயர் தருக.

1. ..................................................................... 2. ...................................................

**02. பின்வருவன சரியாயின் சரி என்றும் பிழை என்றும் அடையாளம் இடுக.**

1. பொருள் முற்றுப் பெற்ற வாக்கியம் தொடர் வாக்கியம் எனப்படும். (.............)

2. பொருள் முற்றுப்பெறாத தொடர், தொடர் வாக்கியம் எனப்படும். (.............)

3. பொருள் முற்றுப் பெற்ற வாக்கியமாக அமைவதற்கு எழுவாய், பயனிலை உறவு அவசியம். (.............)

4. எழுவாய், செயப்படுபொருள் என்பன எப்போதும் பெயர்ச்சொற்களாக இருக்கும். (.............)

5. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன வாக்கிய உறுப்புக்கள் அல்ல. (.............)

6. பெயர்ச்சொற்களை விசேடிக்கும் அடைமொழிகளை வினையடை எனலாம். (.............)

7. பயனிலையை விசேடிக்கும் அடைமொழிகளை வினையடை எனலாம். (.............)

8. ஒரு வாக்கியத்தொடரால் அமைந்த வாக்கியம் தனிவாக்கியம் எனப்படும். (.............)

9. ஒன்றிற்கு மேற்பட்ட வாக்கியத்தொடர்களால் அமையும் வாக்கியங்களைத் தொடர் வாக்கியம் என்போம். (.............)

10. சமநிலை வாக்கியத்தொடர்களால் அமைந்த வாக்கியம் கூட்டுவாக்கியம் எனப்படும். (.............)

11. சமனில் வாக்கியத்தொடர்களால் அமைந்த வாக்கியம் கூட்டுவாக்கியம் எனப்படும். (.............)

**03. பின்வரும் தொடர் வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாக மாற்றி எழுதுங்கள்.**

அ) கண்ணன் இரவு பகலாகக் கண்விழித்துப் படித்துப் பரீட்சையில் முதல் இடத்தைப் பெற்றுச் சித்தியடந்ததோடு அதற்கான பரசினையும் பெற்றுக் கொண்டான். (04 தனிவாக்கியங்கள் ஆக்குக)

.........................................................................................................................................................

.........................................................................................................................................................

.........................................................................................................................................................

.........................................................................................................................................................

ஆ) கொல்கத்தாவில் தினமும் கடலுக்குச் செல்வர் எனினும் சில வேளைகளில் கடற் கொந்தளிப்பும், புயற்காற்றும் அவர்களைத் துன்பத்துக்குள்ளாக்கி விடுவதுமுண்டு, (3 தனிவாக்கியங்கள் எழுதுங்கள்)





AGARAM DHINES

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

இ) மீனவர் தினமும் கடலுக்குச் செல்வர் எனினும் சில வேளைகளில் கடற் கொந்தளிப்பும், புயற்காற்றும் அவர்களைத் துன்பத்துக் குள்ளாக்கி விடவதுமுண்டு. (3 தனிவாக்கியங்கள் ஆக்குக)

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

**04) பின்வரும் வாக்கியங்கள் தனிவாக்கியமா? கூட்டுவாக்கியமா அல்லது கலப்பு வாக்கியமா என இனங்கண்டு எழுதுக.**

1. நாளை நாங்கள் யாழ்ப்பாணம் செல்வோம். ...........................................................................

2. புறாக்கள் வான்வெளியில் பறப்பதைக் கண்டேன். ...........................................................................

3. சிங்கப்பூர் சென்றிருந்த குமரன் குடும்பத்தினர் நேற்று தாயகம் வந்து சேர்ந்தனர்.

...........................................................................

4. 'அறஞ் செய விரும்பு' என்றார் ஔவையார். ...........................................................................

5. கமலன் கடதாசியில் பல்வேறு பட்டங்களைச் செய்ய வான்வெளியில் பறக்கவிட்டான்.

...........................................................................

**05. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

அ) செய்தி என்றால் என்ன?

.............................................................................................................................................................

ஆ) செய்திகளை வெளிப்படுத்தும் ஊடகங்கள் எவை?

.............................................................................................................................................................

இ) செய்திகளை ஊடகங்களுக்குப் பெற்றுத் தருவோரை எவ்வாறு அழைப்பர்?

.............................................................................................................................................................

ஈ) செய்தி வகைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

.............................................................................................................................................................

உ) செய்தி ஒன்றை எழுதும் போது கடைப்பிடிக்கவேண்டியவை எவை?

.............................................................................................................................................................

AGARAM DHINES

**06. பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

**1. உணவும் உடல் நலமும் (உரையாடல் அல்லது கட்டுரை)**

தலைப்பு: உணவின் முக்கியத்துவமும் உடல்நலத்தில் அதன் பங்களிப்பும்

அறிமுகம் – உணவின் அடிப்படை தேவை

சத்துள்ள உணவுகளின் வகைகள் (அறுவைச்சி, சுறுசுறுப்பு)

சீரான உணவு நேரம், குடிநீர் முக்கியத்துவம்

பழக்கவழக்கங்களில் மாற்றங்கள் உடற்பயிற்சி தொடர்பு

முடிவுரை – "நலம் தரும் உணவே, நமதாயுடல் மென்மை"

☐ உங்கள் குடிநீர் பழக்கங்கள் உங்கள் ஒருநாள் ஆற்றலை 20% அதிகரிக்கலாம்!

**2. நான் வைத்தியரானால் (கற்பனைக்கட்டுரை)**

தலைப்பு: ஒரு கனவுத் தொழிலாளியாக – வைத்தியராக

அறிமுகம் – வைத்தியராக இருப்பது என்னும் ஆசை

நான் என்ன செய்தேனும்? (ஊரின் சுகாதாரம் மேம்படுத்தல், இலவச முகாம்கள்)

ஏழை மக்கள் நலனில் ஈடுபாடு

மருத்துவ தொழில்நுட்பத்தில் புதுமை

முடிவுரை – ஒரு உணர்வுபூர்வமான சேவை மனப்பான்மையை வளர்த்தல்

☐இந்தியாவிலேயே 70% கிராமப்புற மக்களுக்கு மருத்துவ சேவைகள் இன்னும் குறைவாகவே உள்ளது!

**3. எனது பாடசாலை விளையாட்டுப் போட்டி (விவரணைக்கட்டுரை)**

தலைப்பு: உற்சாகமும் ஒற்றுமையும் – என் பள்ளியின் விளையாட்டுப் போட்டி நாள்

அறிமுகம் – விளையாட்டு தினம் எதிர்பார்ப்பு

தொடக்க நிகழ்ச்சி (தேசியக் கொடி ஏற்றம், படையணிகள்)

விளையாட்டு போட்டிகள் – ஓட்டம், நீளச்சல் போட்டி, ஏனைய போட்டிகள்

நண்பர்கள், ஆசிரியர்கள் ஊக்கம்

பரிசளிப்பு விழா

முடிவுரை – ஒருமைப்பாட்டை வளர்க்கும் அருமை நாள்

AGARAM DHINES

☐ விளையாட்டு மாணவர்கள் மன அழுத்தம் குறைவதற்கும், அக்கறையுடனும் செயல்பட உதவுகிறது!

**4. மூடப்பழக்கவழக்கங்கள் ஒழிய வேண்டும்**

(நண்பர்கள் இருவருக்கிடையே உரையாடல்)

நடிப்பு உரை – ரமேஷ் ௬ ஜெயா

அறிமுகம்:

ரமேஷ் – "நம்ம ஊர்ல இன்னும் சிலர் பாம்பு போல் மூடநம்பிக்கையில் வாழ்றாங்க!"

ஜெயா – "ஆமாம், கண்ணுத்தீக்கு, சுட்டி வைத்தல் எல்லாம் அறிவியல் ஆதாரம் இல்லாம இருக்குது."

உரையாடல் பகுதி:

பழக்கங்கள் எப்படி உருவானது?

எதை வைத்து தவறாக நம்புகிறார்கள்?

சமூகத்தில் அதன் பாதிப்பு

நவீன அறிவியல் விளக்கம்

பள்ளியில் இது பற்றி எப்படிப் பேசலாம்?

முடிவுரை:

ஜெயா – "அறிவுடன் வாழ்ந்தால் தான் நம்ம சமூகமும் முன்னேறும்!"

ரமேஷ் – "நாம்தான் ஆரம்பிக்கணும் இப்போதே!

**07. பின்வரும் இரட்டை மொழிகளின் பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.**

1) கொளுகொளு 2) தொளதொள 3) கலகல 4) பளபள 5) விறுவிறு

6) பறபற 7) குசுகுசு 8) மொசுமொசு 9) முணுமுணு 10) தகதக

**08. இன்று காலை வானொலியில் அல்லது சமூக ஊடகத்தில் கேட்ட செய்தியறிக்கையின் தலைப்புச் செய்திகளை எழுதுக.**

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................





AGARAM DHINES

ஆக்கத்திறன்

## செய்திவாசிப்போம்

அறிமுகம்

- செய்தி வாசிப்பு என்பது தனித்துவமான கலையாக வளர்ந்து வருகிறது.
- இலத்திரினியல் ஊடகங்கள் இணையவழி ஊடகங்களும் முக்கியத்துவம் பெற்றுவரும் இந்நாட்களில் செய்தி வாகிப்பாளர்களும் கவனிப்புக்குள்ளாகி வருகிறார்கள்.
- செய்தி வாசிப்பதற்குரிய திறன்களை வளர்த்துக் கொள்வது பயன்தரும்.

செய்தியின் அமைப்பு.

- செய்தியின் சாராம்சமாகவும் செய்தியினக் கேட்கத் தூண்டுவதாகவும் செய்தியின் தலைப்பு அமையும்.
- செய்தியின் பிரதான விடயங்கள் முதலில் இடம்பெறும்.
- செய்தியின் கடைசிப் பகுதியில் தொடர்புடையதும் முக்கியத்துவம் குறைந்ததுமான விடயங்க்ள இடம்பெறும்.

செய்தி வாசிப்பின்போது கவனிக்க வேண்டியவை

- செய்தியினைச் சரியாக விளங்கி வாசித்தல்.
- நிறுத்தக்குறிகளை அனுசரித்து வாசித்தல்.
- நிதானமாகவும் தெளிவாகவும் வாசித்தல்.
- கவனக் குவிப்புடன் வாசித்தல்.

செய்தி வாசிப்பு நுட்பங்கள்.

- உச்சரிப்பு, தொனி வேறுபாடுகளுடன் வாசித்தல்.
- உணர்வுகளை நாசூக்காக அனுசரித்தல்.
- அவசரமின்றியும் பதற்றமின்றியும் வாசித்தல்.
- தேவையான தயர்படுத்தலோடு / ஒத்திகையின் பின் வாசித்தல்.

### மாதிரிச் செய்திகள்

**செய்தி வாசிப்பு – 01**

ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியில் சர்வதேச சிறுவர் தினத்தை உலக நாடுகள் கொண்டாடுகின்றன. இன்றைய தினம் இலங்கை முழுவதிலும் 'நமது தேசத்தை நாமே கட்டியெழுப்புவோம்' என்னும் தொனிப்பொருளில் சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்படுகிறது.

இன்று கொண்டாடப்படும் சிறுவர் தினத்தையொட்டி அரசியல், சமய, சமூகத் தலைவர்கள் பலரும் தமது வாழ்த்துச் செய்திகள வெளியிட்டுள்ளனர்.

முன்பள்ளிகள், பாடசாலைகள் முதலிய கல்வி நிறுவனங்களிலும் கிராமிய நிறுவனங்களிலும் இத்தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. கலைநிகழ்ச்சிகள், கேளிக்கை விளையாட்டுகள், போட்டி நிகழ்ச்சிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பல்வேறு துறைகளிலும் தமது திறமையை நிலைநாட்டிய சிறுவர்கள இன்றைய தினத்தில் பரிசில்கள், சான்றிதழ்கள், விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

**செய்தி வாசிப்பு – 02**

வணக்கம் மாணவச் சகோதரச் சகோதரிகளே,

இன்று இந்தியாவில் நிகழ்ந்த மிக கவலையளிக்கும் ஒரு செய்தியை உங்களுடன் பகிர்ந்துகொள்ளப் போகிறேன்.

இன்று காலை 9.30 மணியளவில், மகாராஷ்டிரா மாநிலம் புனேயில், ஒரு சிறிய பயணிகள் விமானம் அவசர தரையிறக்கம் செய்யும் போது திடீரென தவறி விழுந்தது. இந்த விபத்தில் விமானத்திலிருந்த ஐந்து பயணிகளில் மூன்று பேர் சிறிய காயங்களுடன் மீட்கப்பட்டனர். மற்ற இருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விமானி மிகுந்த துணிச்சலுடன் விமானத்தை பாதுகாப்பாக தரையிறக்க முயற்சித்துள்ளார்.

விபத்தின் காரணம் தொழில்நுட்ப கோளாறு எனத் தொடக்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விமானப் பாதுகாப்புத் துறை இதற்கான விசாரணையைத் தொடங்கியுள்ளது.

இந்தச் சம்பவம், விமானப் பயணங்களின் போது பாதுகாப்பு நடவடிக்கைகள் மிக முக்கியம் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

இவ்வாறு இந்தியா தொடர்பான செய்தியை உங்களுக்காகத் தெரிவித்தேன். நன்றி.

**மொழிவளம்**

## 14) மரபுச் சொற்கள்

**01. இலை பற்றிய மரபுச் சொற்கள்**

- ஈச்சை - ஓலை
- கமுகு - ஓலை
- கரும்பு - தோகை
- சோளம் - தோகை, தாள்
- தாளை - ஓலை
- தென்னை - ஓலை
- நெல் - தாள்
- பலா - இலை
- பனை - ஓலை
- புள் - தாள்
- மா - இலை
- முருங்கை - இலை
- வாழை - இலை

**02. உள்ளீடு பற்றிய மரபுச் சொற்கள்**

- அவரை - பருப்பு
- உழுந்து - பருப்பு
- கற்றாளை - சோறு
- துவரை - பருப்பு
- தினை - அரிசி
- தோடை - சுளை
- நெல் - அரிசி
- பயறு - பருப்பு

AGARAM DHINES

- பலா - சுளை
- மா - சதை
- வாழை - சதை
- வரகு - அரிசி

## 03. கூட்டத்தைக் குறிக்கும் மரபுச் சொற்கள்

- அறிஞர் - அவை
- ஆ - நிரை
- ஆடு - மந்தை
- உடு - திரள்
- உயிர் - தொகுதி
- எறும்பு - கூட்டம், குவியல்
- ஒளி - கற்றை
- கல் - குவியல்
- கள்வர் - கூட்டம்
- காவல் - படை
- குண்டர் - கும்பல்,
- சுருட்டு - கட்டு
- சேனை - திரள்
- திறப்பு ∴ பூட்டு - கோர்வை
- தீவு - கூட்டம்
- தென்னை - தோப்பு
- நடிகர் - குழு
- நாடகம் - குழு, கோஷ்டி, சபை
- நாற்று - பிடி
- நூல் - பந்து
- நெல் - குவியல்
- பல் - வரிசை
- பசு - நிரை
- பாடகர் - குழு
- படைவீரர் - அணி
- புகையிலை - சிப்பம்
- புத்தகம் - அடுக்கு
- புல் - கற்றை
- பூ - கொத்து, மஞ்சரி
- பூதம் - கணம்
- மக்கள் - கூட்டம், தொகுதி
- மணி - மாலை
- மயில் - குழாம்
- மரம் - காடு
- மலர் - செண்டு, மாலை
- மலை - தொடர்
- மாணவர் - குழாம்
- மா - சோலை, தோப்பு
- மான் - கூட்டம்
- முகில் - கூட்டம்
- முத்து - குவியல்
- யானை - பந்தி
- வைக்கோல் - கற்றை

AGARAM DHINES

## 04. தொகுதி பற்றிய மரபுச் சொற்கள்

- ஈச்சை - குலை
- சோளம் - கதிர்
- திராட்சை - குலை
- தென்னை - குலை
- நெல் - கதிர்
- பனை - குலை
- புளி - கொத்து
- பூங்கொத்து - மஞ்சரி
- மா - கொத்து
- முந்திரி - குலை
- வாழை - குலை, தாறு

## 05. பிஞ்சுப் பற்றிய மரபுச் சொற்கள்

- அவரை - பிஞ்சு
- கத்தரி - பிஞ்சு
- தென்னை - குரும்பை
- பனை - நுங்கு, குரும்பை
- பலா - மூசு
- பூசணி - பிஞ்சு
- மா - வடு
- மூங்கில் - கன்று
- வாழை - கச்சல்
- வெண்டி - பிஞ்சு

## 06. வித்து பற்றிய மரபுச் சொற்கள்

- ஆமணக்கு - முத்து
- கத்தரி - விதை
- கொய்யா - விதை
- சோளம் - மணி
- தினை - மணி
- நிலக்கடலை - பருப்பு
- நெல் - மணி
- பப்பாசி - விதை ∴ கொட்டை
- பலா - கொட்டை
- பாகல் - விதை
- பூசணி - விதை
- புளி - கொட்டை
- மிளகாய் - வித்து
- வேம்பு - விதை ∴ கொட்டை

## 07. மலம் பற்றிய மரபுச் சொற்கள்

- ஒட்டகம் - இலத்தி, இலண்டம்
- ஆடு - பிழுக்கை
- கழுதை- விட்டை
- காகம் - எச்சம்
- குதிரை - இலத்தி, இலண்டம்
- குருவி - எச்சம்
- மாடு - சாணம்
- யானை - இலத்தி, இலண்டம்

## 08. பிற மரபுச் சொற்கள்

- ஆடு மேய்ப்பவன் - ஆயன், இடையன்
- கப்பல் செலுத்துபவன் - மாலுமி, மீகாமன்
- தேர் செலுத்துபவன் - பாகன்
- மாடு மேய்ப்பவன் - இடையன்
- யானை செலுத்துபவன் - பாகன்
- விமானம் செலுத்துபவன் - வலவன்

## 09. விலங்கு பற்றிய இளமை மரபு

- அணில் - பிள்ளை, குஞ்சு
- ஆடு - குட்டி
- எலி - குஞ்சு, குட்டி
- எருமை - கன்று
- கரடி - குட்டி
- கழுதை - குட்டி
- கிளி - பிள்ளை, குஞ்சு
- கீரி - பிள்ளை
- குரங்கு - குட்டி, பறள்
- குருவி - குஞ்சு
- கோழி - குஞ்சு
- சிங்கம் - குட்டி, குருளை
- தவளை - குஞ்சு, பேத்தை
- நாய் - குட்டி, குருளை
- பன்றி - குட்டி
- புலி - குட்டி, பறழ்
- பூனை - குட்டி, பறள்
- மான் - கன்று, குட்டி
- யானை - போதகம், குட்டி

## 10. ஆண் பெண் மரபுச் சொற்கள்

| பிராணி | ஆண் | பெண் |
|---|---|---|
| ஆடு | கடா | மறி |
| கரடி | ஒருத்தல் | பெட்டை |
| குதிரை | குண்டு | பெட்டை, வடை |
| குரங்கு | கடுவன் | மந்தி |
| சிங்கம் | ஏறு | பெட்டை |
| கோழி | சேவல் | பேடு, பெட்டை |
| நரி | ஓரி | பாட்டி |
| பன்றி | ஒருத்தல் | பிணை |

| | | |
|---|---|---|
| புலி | போத்து | பிணை |
| பூனை | கடுவன் | பெட்டை |
| மரை | ஒருத்தல் | பெட்டை |
| மயில் | போத்து | அளகு |
| மாடு | காளை, ஏறு | பசு, நகு |
| மான் | கலை | பிணை |
| நண்டு | அலவன் | பெடை |
| நாய் | கடுவன் | பெட்டை |
| யானை | களிறு | பிடி |

## 11. விலங்கு மற்றும் பறவைகளின் ஒலி மரபுச் சொற்கள்

- **ஆடு - கத்தும்**
- **ஆந்தை** - அலறும்
- எருது - எக்காளமிடும்
- எலி - கீச்சிடும்
- கழுதை - கத்தும்
- காகம் - கரையும்
- கிளி - பேசும், கொஞ்சும், மிழற்றும்
- குதிரை - கனைக்கும்
- குரங்கு - அலப்பும்
- குருவி - கீச்சிடும்
- குயில் - கூவும்
- கோழி - கொக்கரிக்கும்
- சிங்கம் - கர்ச்சிக்கும், முழங்கும்
- சேவல் - கூவும்
- தவளை - கத்தும்
- தேவாங்கு - அழும்
- தேனீ - ரீங்காரம் செய்யும்
- நரி - ஊளையிடும்
- நாய் - குரைக்கும்
- புலி - உறுமும்
- பசு - கதறும்
- பல்லி - சொல்லும்
- பன்றி - உறுமும்
- புறா - குறுகுறுக்கும், குனுகும்
- பூனை - சீறும்
- மயில் - அகவும்
- யானை - பிளிரும்
- வண்டு - முரலும், இரையும்
- வாத்து - கத்தும்
- வானம்பாடி - பாடும்

## 12. வினை மரபுச் சொற்கள்

- அப்பம் - தின்
- ஆடை - நெய்
- ஆபரணம் - அணி
- இறை - வழிபடு
- களை - பறி
- சுவர் - எழுப்பு
- சோறு - உண், சாப்பிடு
- தண்ணீர் - குடி
- பழம் - தின்
- பாட்டு - பாடு
- பாய் - விரி
- பூ - பறி
- மரம் - வெட்டு
- மலர் - கொய்
- மாத்திரை - விழுங்கு
- நீர் - பாய்ச்சு
- நெல் - தூற்று

## 13. இருப்பிடம் பற்றிய மரபுச் சொற்கள்

- ஆடு - பட்டி
- எலி - வளை
- கரையான் - புற்று
- கிளி - கூடு, பொந்து
- குதிரை - கொட்டில், லயம்
- குருவி - கூடு
- கோழி - பண்ணை
- சிங்கம் - குகை
- சிலந்தி - வலை
- நண்டு - வளை
- நாய் - கூடு
- பாம்பு - புற்று
- மனிதன் - வீடு, இல்லம்
- மாடு - தொழுவம்

## 14. தாவர உறுப்பு மரபு சொற்கள்

- ஆவரம் - குழை
- கப்பம் - தட்டு
- கீரை - தண்டு
- சோளம் - தட்டு
- தாழை - மடல்
- தென்னை - கீற்று
- நெல் - தாள்
- முருங்கை - கீரை
- வாழை - தண்டு
- வேப்பம் - தழை

AGRAM DH

**இலக்கணம்**

**வாக்கியம்**

சொற்கள் ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமறைக்கேற்ப ஒன்றுடன் ஒன்று அமைப்பு ரீதியாக இணைந்து ஒரு முற்றுப்பொருளைத் தருமாயின் அது வாக்கியம் எனப்படும்.

**வாக்கியங்களை அமைப்பு அடிப்படையில்**

**தனி வாக்கியம், கூட்டு வாக்கியம், கலப்பு வாக்கியம்**

## 1. தனிவாக்கியம்

தனி வாக்கியம் எனப்படுவது ஓர் எழுவாயினையும் ஒரு பயனிலையையும் கொண்டு அமைந்த வாக்கியங்கள் தனிவாக்கியங்கள் எனப்படும்.

1. நான் சோறு சாப்பிட்டேன்
2. மாலா வீட்டுக்கு வந்தாள்

மேலே உள்ள இரண்டு வாக்கியங்களில் ஓர் எழுவாயும் ஒரு பயனிலையையும் வந்துள்ளது.

## 2. கூட்டு வாக்கியம்

ஒரு வாக்கியத்தில் ஓர் எழுவாயின் ஒன்றுக்கு மேற்பட்ட செயல்களையும், ஒரு செயலை செயற்படுத்தும் ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாயினையும் கொண்ட வாக்கியங்கள் கூட்டு வாக்கியங்கள் எனப்படும்.

ஓர் எழுவாயும் ஒன்றுக்கு மேற்பட்ட பயனிலை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய் ஒரு பயனிலைகள் கொண்ட வாக்கியங்கள்.

மாலா நன்றாகப் படித்து, பரீட்சையில் சிறப்பான புள்ளிகளைப் பெற்றாள்.

01. மாலா நன்றாகப் படிப்பாள்.
02. மாலா பரீட்சையில் சிறப்பான புள்ளிகளைப் பெற்றாள்.

இவ்வாக்கியத்தில் மாலா என்ற ஓர் எழுவாயின், "படிப்பாள்", "பெற்றாள்" என்ற இரண்டு பயனிலைகள் இடம்பெற்றுள்ளன இதனையே கூட்டு வாக்கியம் என்போம்.

நானும் நண்பனும் கவிதை எழுதினோம்.
01. நான் கவிதை எழுதினேன்.
02. நண்பன் கவிதை எழுதினான்

இவ்வாக்கியத்தில் "நான்", "நண்பன்" என்ற இரண்டு எழுவாயும், "எழுது" என்ற ஒரு பயனிலையும் வந்துள்ளது. இதனையும் கூட்டு வாக்கியம் என்போம்.

கூட்டு வாக்கியங்களில், தனிவாக்கிங்கள் (இரண்டு தனித் தனி சமநிலைத் நிகழ்வுகள்) இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இரண்டு சமநிலைத் தொடர்களை இணைக்க (உம், அல்லது , இல்லையென்றால், ஓ, ஆவது, ஆனால், ஆகவே) என்ற இணைப்பிடைச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இராமன் பாடசாலைக்கும் கமலா வீட்டுக்கும் சென்றனர்.

1. இராமன் பாடசாலைக்குச் சென்றான்.
2. மாலா வீட்டுக்குச் சென்றாள்.

நான் கண்டிக்கு அல்லது கொழும்புக்குச் செல்வேன்.

AGARAM DHINES

1. நான் கண்டிக்குச் செல்வேன்.
2. நான் கொழும்புக்குச் செல்வேன்.

ராம் தன் பிள்ளைகளை அறிந்திருந்தான் ஆனால் தன்னை வெளிப்படுத்தவில்லை.

1. ராம் தன் பிள்ளைகளை அறிந்திருந்தான்.
2. ராம் தன்னை வெளிப்படுத்தவில்லை.

### 3. கலப்பு வாக்கியம்

ஒரு தலைமைத் தொடரையும் ஒன்றோ பலவோவான சார்புத் தொடர்களையும் கொணடமைந்த வாக்கியம் கலப்பு வாக்கியம் எனப்படும். அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட தகவல்களை அல்லுத செய்திகளை ஒரே வாக்கியத்தில் கொண்டிருப்புத எனவும் குறிப்பிட முடியும்.

எச்சவாக்கியத் தொடர்களாலும், நிரப்பித்தொடர்களாலும் கலப்பு வாக்கியங்கள் ஆக்கப்படுகின்றன.

க.பொ.த சாதாரண பரீட்சையில் சித்திபெறுவதே எங்கள் நோக்கம் என்று மாணவர்கள் கூறினார்கள்.

1. சார்புத் தொடர் :- க.பொ.த சாதாரண பரீட்சையில் சித்திபெறுவது. (எச்சம்)
2. தலைமைத் தொடர் : - மாணவர்கள் கூறினார்கள்
3. இடைச்சொல் :- என

தலை வலித்ததால் கமலன் இன்று பாடசாலைக்கு வரவில்லை.

1. தலைமைத்தொடர் :- கமலன் இன்று பாடசாலைக்கு வரவில்லை.
2. சார்புத்தொடர்:- தலை வலித்தால்
3. இணைப்பிடைச் சொல்: ஆல்

பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெறவேண்டும் என்றால் மாணவர்கள் முயற்சித்துக் கற்க வேண்டும்.

1. தலைமைத்தொடர்: பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெறவேண்டும்.
2. சார்புத்தொடர்: மாணவர்கள் முயற்சித்துக் கற்க வேண்டும்
3. இணைப்பிடைச் சொல்: என்றால்

### 4. செய்தி வாக்கியம்:

ஓர செய்தியைத் தெளிவாகக் கூறும் வாக்கியம். எ.கா: “பறவைகள் கூட்டில் வசிக்கின்றன.”

### 5. கட்டளை வாக்கியம்:

ஒரு செயலைச் செய்யும்படி ஏவும் வாக்கியம். எ.கா: “கதவைத் தாழ்ப்பாள் போடு.”

### 6. வினா வாக்கியம்:

வினா கேட்கும் வாக்கியம். எ.கா: “நீ எங்கே போகிறாய்?”

### 7. உணர்ச்சி வாக்கியம்:

உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வாக்கியம். எ.கா: “ஆஹா! என்ன ஓர அழகான காட்சி!”

***

AGARAM DHINES